ISSN: 2320-4842
Vol-18 No. 04 October–December 2024

# மகாத்மாகாந்தி பிள்ளைத்தமிழ் வெளிப்படுத்தும் வாழ்வியல் அறம்

**பா.விஜயலெட்சுமி,** பதிவு எண் – 21113154022028, முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ் உயராய்வு மையம், தமிழ்க்கலைஆய்வகம், தெ.தி.இந்துக்கல்லூரி, நாகர்கோவில்-02. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைகழகம்,திருநெல்வேலி.
G-Mail - balavijayalekshmi@gmail.Com
ORCiD: http://orcid.org/0000 -0002-5590-9479

நெறியாளர் :**முனைவர் இரா.சொர்ண பமிலா,** உதவிப்பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம், தமிழ்க்கலைஆய்வகம், தெ.தி.இந்துக்கல்லூரி, நாகர்கோவில்-02.
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைகழகம், திருநெல்வேலி.
G.mail - sornabamila1986@gmail.com
ORCiD: http://orcid.org/0000-0002-3677-4644

**ஆய்வுச்சுருக்கம்**

பாரததேசமானது மாமன்னர்களாலும், பேரரசர்களாலும்,வள்ளல்களாலும் ஆட்சி செய்யப்பட்ட பெருமைக்குரியது.அவர்களின் வீரத்தாலும், அருளுடைமையாலும் பெறப்பட்ட நிலப்பகுதி இயற்கையிலும், செல்வத்திலும் மேலோங்கி காணப்பட்டது என்பதை சங்க இலக்கியங்களும், கல்வெட்டுகளும் வெளிப்படுத்துகின்றன. பெரும் புகழுடைய இந்நிலப்பகுதியை முந்நூறு ஆண்டுகளாய் அடிமைப்படுத்திய ஆங்கிலேயர்கள் இயற்கை மற்றும் செல்வ வளத்தை சுரண்டி தன் நாட்டுக்கு கொண்டு செல்வதையே நோக்கமாக கொண்டிருந்தனர்.இவர்களை இந்நாட்டிலிருந்து விரட்டி, நாட்டை காக்கும் பணியானது சுதந்திரப் போராட்டமாக வெடித்தது. வெகுண்டெழுந்த மக்களை அறத்தோடு கூடிய அகிம்சை வழியில் போராட செய்து, அதனை தலைமை தாங்கி வெற்றி கண்ட மாமனிதன் காந்தி என்ற மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி ஆவார். இவரது உயர் பண்புகளால் ‘மகாத்மா’என்ற பட்டம் பெற்றார்.தேசப்பிதா (அ) தேச தந்தை என புகழப்படும் காந்தியை குறித்து கவிஞர் தமிழ்க்குழவி அவர்கள் `மகாத்மா காந்தி பிள்ளைத்தமிழ்' என்னும் நூலை இயற்றியுள்ளார். இத்தகைய நூலில் இடம் பெற்றுள்ள வாழ்வியல் அறச்செய்திகளை உற்றுநோக்கி ஆராய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

## முன்னுரை

பண்டைய கால தமிழர்கள் அன்பையும், அறத்தையும், வீரத்தையும், பக்தியையும் தமது வாழ்வின் முக்கிய கூறுகளாக எண்ணியதோடு இலக்கியங்களாகவும் வடித்தனர். அவ்வாறே வாழவும் செய்தனர். நீதி இலக்கியங்கள் குறிப்பிடும் அறங்களை பின்பற்றி வாழ்ந்த சுதந்திரப் போராட்ட தலைவர்களுள் முக்கியமானவர் மகாத்மா காந்தியாவார். அவர் தம் வாழ்வில் பின்பற்றிய அறச்செய்திகளையும், அவற்றிற்கு காரணமாய் அமைந்த உண்மை செய்திகளையும் ‘மகாத்மாகாந்தி பிள்ளைத்தமிழ்’ என்ற நூலின் வழி ஆராய்வதே இக்கட்ரையின் நோக்கமாகும்.

## மகாத்மாகாந்தி

தேசத்தந்தை என்று புகழப்படும் மகாத்மா காந்தியின் இயற்பெயர் மோகன் தாஸ் கரம்சந்த் காந்தி ஆகும். இவர் அக்டோபர் 2, 1869-ல் குஜராத் போர்பந்தரில் பிறந்தார். இவரது பெற்றோர் கரம்சந்த் உத்தமசந்த் காந்தி, புத்லிபாய் ஆவார். இவருக்கு ரவீந்திரநாத்தாகூர் ‘மகாத்மா’ என்ற பட்டத்தை வழங்கினார். சிறுவயதில் சிரவணன் நாடகம் பார்த்ததிலிருந்து

அவரது மனதில் பெற்றோர்களைப் பேணும் எண்ணம் வலுப்பெற்றது. அதே காலகட்டத்தில் அரிச்சந்திரன் நாடகத்தையும் அவர் பார்த்தார், அதன் பிறகு உண்மையின் வலிமையை அவர் அறிந்து கொண்டார். 13-ம் வயதில் அதே வயதுடைய கஸ்தூரி பாயை மணர்ந்தார். 1896 ஆம் ஆண்டில் பாரிஸ்டர் பட்டம் பெற்றார். மேலும் தனது 18-வது வயதில் பாரிஸ்டர் எனப்படும் வழக்குரைஞர் படிப்பிற்காக இங்கிலாந்து சென்றார். பம்பாயில் வழக்குரைஞராக பணியாற்றினார். தென்னாப்பிரிக்கா சென்ற காந்தி நிறவெறியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக போராடி வெற்றி கண்டார். 1894 -ல் இந்திய காங்கிரஸ் இயக்கத்தை தொடங்கினார். 1906 இல் நடந்த போராட்டத்தில் சத்தியாகிரகம் என்ற அறவழிப் போராட்டத்தை தொடங்கினார். மேலும் உப்பு சத்தியாகிரகம், வரி கொடா இயக்கம், ஆலை தொழிலாளர் போராட்டம், ஒத்துழையாமைஇயக்கம், ஜாலியன் வாலாபாக் போன்ற போராட்டங்களை மேற்கொண்டு இந்திய நாடு சுதந்திரம் பெற பேருதவி செய்தார்.

**மகாத்மா காந்தி பிள்ளைத்தமிழும் ஆசிரியரும்**

மகாத்மாகாந்தி பிள்ளைத்தமிழ் என்ற நூலின் ஆசிரியர் கவிஞர் தமிழ்க்குழவி ஆவார். நாகர்கோவில் மாநகரில் வடலிவிளை என்னும் சிற்றூரில் 1950 பிப்ரவரி இரண்டாம் நாள் பிறந்தார். இவரது பெற்றோர் திரு.ஆனந்தநாதன் மற்றும் திருமதி மீனாட்சி ஆவார். இவரது இயற்பெயர் விசுவநாதன்.தமிழ் மீது கொண்ட பற்றால் பல கவிதை தொகுப்புகளையும், சிற்றிலக்கிய வகை சார்ந்த பிள்ளைத்தமிழ் நூல்களையும் இயற்றியுள்ளார். பிள்ளைத்தமிழுக்குரிய பத்து பருவங்களில் மகாத்மாவை குழந்தையாகவும், தன்னை தாயாகவும் எண்ணிதோடு மட்டுமல்லாது சுதந்திர போராட்ட செய்திகளையும்,காந்தியின் அற பண்புகளையும்,சமூக கருத்துகளையும் இணைத்து பாடியுள்ளார்.

**இனிய சொல்**

மனிதப்பிறவியானது பிற உயிர்களிடத்திலிருந்து உயர்ந்த நிலையை அடைவதற்கு பேச்சாற்றல் முக்கிய காரணமாகும். பகுத்தறிவுடைய மனிதன் என்பதை அவனது பேச்சும் செயலுமே உறுதி செய்கின்றன.உறுதியையும், இனியசொற்களையும் பேசுவராகவும் பிறரிடம் கடிந்து கொள்ளாதவராகவும் காந்தியடிகள் காணப்பட்டார்.

**இன்சொல் மொழியால் இறுகியப் பாறையும்**
**இளகத் தலைப்படுமே (மகா.பி.த.1:3)**

என்ற வரிகளில் அறியமுடிகிறது. சான்றோர்கள் சொற்களை கூறிடும் பழக்கம் கொண்டிருப்பர் கடுஞ்சொற்களை பேசமாட்டார்கள் என்பதை ஆசாரக்கோவை,

**...கடுஞ்சொல் உரையார் இருவராய்**
**நின்றுழியும் செல்லார் விடல் (ஆசாரக்கோவை 49 )**

என்ற வரிகளில் அறிய முடிகிறது.

**புலனடக்கம்**

ஐம்பூதங்களால் உருவாக்கப் பெற்ற இவ்வுலகில் வாழும் மனிதன் ஐம்புலன்களால் பெருந்துன்பத்தை அடைகிறான். ஆதலால் புலன்களை அடக்கி வாழ்வதே மனிதனுக்கு சிறப்பளிக்கிறது. அதாவது புலன்களை சரியான முறையில் நடத்துதல் என்றும் கூறலாம். இதனை,

**ஐவாய வேட்கை அவா அடக்கல் முன் இனிதே (இனியவை நாற்பது:24)**

என்ற பாடலில் ஐம்பொறிகளின் விருப்பத்தை அடக்கி ஆழ்வது இனிமை என இனியவை நாற்பது விளக்குகிறது. இத்தகைய புலனடக்க கொள்கையை தமது வாழ்வாக காந்தியடிகள் கொண்டிருந்தார் என்பதை,

**"ஐம்புலக் கதவை அடைக்கும் உபாயம் அறிவ தெதற்காக"(மகா.பி.த 1.9)**

என்ற பிள்ளைத்தமிழ் வரிகள் சுட்டுகிறது.

**கொல்லாமை**

பிற உயிர்களை துன்புறுத்துவதும் அதனை கொலை செய்து உண்பதும் மனித செயலற்ற தன்மையாகும். பிற உயிரின் ஊனைத் தின்று தன் உடலினை வளர்ப்பவன் அறமற்றவனாவான். காந்தியடிகள் தன் நண்பரோடு இணைந்து மாமிசம் உண்டதாகவும் அதனை தன் பெற்றோருக்கு தெரியாமல் மறைத்து விட்டதாகவும் **"பெற்றோரிடம் பொய் சொல்லக்கூடாது என்ற எந்தன் புனிதமான ஆசையின் காரணமாகவே மாமிசம் சாப்பிடுவதை விட்டுவிட்டேன்"சத்திய சோதனை (பக்கம்:26)**என காந்தியடிகள் கூறியுள்ளார்.

**"கொல்லா மைபுலால் உண்ணா நோன்பு**
**குறளின் அருட்கொடையோ " (மகா பி த 2 .6)**

என்ற வரிகளில் கொல்லாமை குறித்து மகாத்மா காந்தி பிள்ளைத்தமிழ் வெளிப்படுத்துகிறது.

**அகிம்சை**

**"அகிம்சை" என்ற சொல் பலநூற்றாண்டுகளாய் மக்களிடையே புழக்கத்தில் உள்ளது. "மலைகளை விட அகிம்சை பழமையானது " என்கிறார். மகாத்மா காந்தி (சத்திய சோதனை பக்:16)** அகிம்சையானது ஐந்து கொள்கைகளை தன்னகத்தே கொண்டுள்ளது . அவை 1.கொல்லாமை, 2.அன்பு, 3.அகிம்சைச்செயல், 4. அகிம்சை அறிவியலும் மதிப்பீடுகளும், 5.உண்மை போன்றவையாகும். இந்திய தேசத்தின் சுதந்திரத்திற்கு மகாத்மாவின் அகிம்சை போராட்டங்கள் பெருந்துணையாக இருந்தது மேலும் ஆப்பிரிக்காவில் தீண்டாமைக்கு எதிராக அறப்போராட்டத்தை நிகழ்த்தி வெற்றியும் கண்டார்.இதனை,

**ஆப்பிரிக்காவிலும் தீண்டா மைக்கெதிர் அறப்போர் நிகழ்த்தியவா**
**அந்நிய நாட்டவர் ஆதிக் கத்தை அசைத்ததும் வாழ்வியலே**
**காபரனாக அகிம்சையைக் கொண்ட கருணா மூர்த்தி யென (ம.கா 2.8)**

என்ற வரிகள் புலப்படுத்துகிறது.

**பேராண்மை**

வீரத்தை தன் உயிர் மூச்சாகக் கொண்ட தமிழர்கள் வாழ்வில், போராட்டத்தில் அமைதி என்ற புதிய பாதையை உருவாக்கியவரும் தனக்கு தீங்கு இழைப்பவர்களைக் கண்டு புன்னகை செய்வதே வீரம் என வாழ்ந்து காட்டியவர் காந்தி என்பதை

**போராட் டத்தில் அமைதி என்பதுன்**
**புதிய கண்டு பிடிப்பாகும்**
**புரிந்து கொண்டவர்க்கு கதுபோல் உயர்ந்த**
**போரு பாயம் ஏதுமில்லை**

……

**வீரம் என்பதன் அறவழி நிற்கும்**
**விவேகம் எவர்க்கும் தீமையிலா**
**வெற்றிப்பாதை (மகா.பி.த: 9.5)**

என்ற வரிகளில் அமையுடைய காந்தியின் வீரத்தை கவிஞர் விளக்குகிறார்.

**கத்தியின்றி ரத்தமின்றி**
**யுத்தமொன்று வடுகுது**
**சத்தியத்தை நித்தியத்தை**
**நம்பும் யாரும் சேருவீர்**

என்ற நாமக்கல் கவிஞரின் வரிகள் காந்தியின் அறப்போராட்டத்தை புகழ்கிறது.

**முடிவுரை**

மகாத்மாகாந்தி உயர்கல்வி படித்து வழக்குரைஞராக பணிபுரிந்த போதிலும் எளியவரை மதித்து உகந்து போற்றும் உயர்குணம் கொண்டிருந்தார். உண்மையை வாழ்விற்கு உரம் என்று உரைத்ததோடு மட்டுமல்லாது, இனிய சொற்களை பயன்படுத்தும் தன்மை கொண்டவராகவும் காணப்பட்டார். போராட்டத்தில் புதியதொரு பாதையாக அறவழிப் போராட்டத்தை அறிமுகபடுத்தினார்.மேலும் வாய்மை, கொல்லாமை, அகிம்சை போன்ற பல அரிய அறக்கருத்துக்களை கற்றதோடு, அறமாண்போடு வாழ்ந்தும் காட்டினார் என்பதை இக்கட்டுரை வழி அறிய முடிகிறது.

**துணைநூற்பட்டியல்**

1.ச செய்பிரகாசம் - மகாத்மா காந்தி சிந்தனை களஞ்சியம், அகிம்சை பெண்ணிய வெட்சி நிறுவனம், காந்தி மியூசிய வளாகம், மதுரை -625 020,முதற்பதிப்பு-2004.2

2.தமிழ்க்குழவி- மகாத்மா காந்தி பிள்ளைத்தமிழ், யாழினி பதிப்பகம், குறளகம், நாகர்கோவில் -629 002, முதற்பதிப்பு-2021.

3.பகவதிசுப்பு- திருக்குறள் தெளிவுரை, சங்கர் பதிப்பகம், வில்லிவாக்கம், சென்னை-600 049, முதற்பதிப்பு-2017.

4.யோகி – ஆசாரக்கோவை, தெய்வப்புலவர் தமிழில் இயல்பில் ஆராய்ச்சி கூடம், சென்னை -600 041, முதற்பதிப்பு-2018.

5.யோகி -இன்னாநாற்பதுஇனியவைநாற்பது, தெய்வப்புலவர் தமிழ் இயற்பியல் ஆராய்ச்சி கூடம்,- சென்னை 600 041, முதற்பதிப்பு-2018.

6.ரா வேங்கடாராஜவேலு - மகாத்மா காந்தியின் சுயசரிதை சத்திய சோதனை, நவஜீவன் பிரசுராலயம் அகமதாபாத் -380 014. முப்பத்துமூன்றாவது பதிப்பு-2007.